MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

# புறநானூறு பன்நோக்கு பார்வை

முனைவர் **க. ரெங்கலெட்சுமி**, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்., பி.எச்.டி., நெட், செட்,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.
**அலைபேசி**: 9344051989
**மின்னஞ்சல்**: drrengalakshmi82@gmail.com
DOI 10.5281/zenodo.17093317.

**Abstract :**

Our Tamil language is the oldest language among the world's languages. It is an ancient language. A language with noble characteristics. Since ancient times, our Tamil literature has been explaining life in harmony with nature. Sangam literature is what reveals these to us. Since that time, our Tamils have been praising high qualities such as generosity, bravery, friendship, and chastity. Based on this, this article is an exploration of the "Purananuru Multi-Point View".

**Key Words** : Purananuru - Sangam Literature - Comparative

## முன்னுரை

உலக மொழிகளுள் நம் தமிழ்மொழி மிகப் பழமையான மொழி . தொன்மையான மொழியாகும். செம்மைப் பண்புகள் கொண்ட மொழி. பழங்காலம் தொட்டே நம் தமிழ் இலக்கியங்கள் இயற்கையோடு இயைந்து வாழ்க்கையை விளக்குகின்றன . இவற்றை நமக்கு வெளிப்படுத்துவதாக அமைவது சங்க இலக்கியங்கள் . அக்காலம் முதல் கொடைப் பண்பு , வீரம், நட்பு. கற்பு நெறி என உயர் பண்புகளைக் காலந்தோறும் நம் தமிழர்கள் போற்றி வருகின்றனர் . இதன் அடிப்படையில் "புறநானூறு பன்நோக்குப் பார்வை" என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## கொடைத் திறம்

அக்கால அரசர்கள் தம்மைத் தேடி வரும் மக்களுக்கு மழை போல் வாரி வழங்கும் கொடைத் தன்மையுடையோராய் வாழ்ந்துள்ளனர்.

"நாட்கள் உண்டு ..........
............. உறையிலும் பலவே!"

என்ற கபிலரின் பாடல் மன்னன் திருமுடிக்காரியின் போற்றத்தக்க கொடைத் தன்மையை உணர்த்துகின்றது.

"விளக்குமணிக் .........
............ வேலினும் பலவே"

ஆய்வேந்தன் பல யானைகளைப் பரிசாகத் தரும் கொடைத் திறனைக் கண்டு அவன் நாட்டுப் பெண்யானை ஒரு முறையில் பத்துக் கன்றுகளைப் பெற்றெடுக்குமோ என்ற வியப்புடன் சிறப்புப் பெற அவனது கொடைத் தன்மையை பாடுகிறார் புலவர்.

## ஒழுக்கமான வாழ்வு

அக்கால சமுதாயம் பரத்தை ஒழுக்கத்தை எற்றுக் கொண்டதாக இருந்தது . ஆயினும் தன் வாழ்வில் அவ்வொழுக்கத்தை ஏற்றுக் கொள்ளாது தனக்கென சில கட்டுப் பாடுகளை விதித்து வாழ்ந்துள்ளனர் அரசர்கள்.

சோழன் நலங்கிள்ளி தனது பாடலில் தான் பகைவர்களை வருத்தம் கொள்ளச் செய்யேன் என்றால்


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

"தீதில் ………
……… குழைக என் தாரே"
என்று வஞ்சினம் கூறுகிறான் . மனம் விரும்பிக் காதல் கொள்ளாத விலை மகளிரின் உடலைத் தழுவும் துன்பத் திற்குத் தான் ஆளாக்கப்படுவேன் என்ற மன்னனது கூற்றின் மூலம் அவனது ஒழுக்கத்தை அறிய முடிகிறது.

**வீரர்களைப் போற்றுதல்**

புலவர்கள் தாம் பரிசில் பெறப்போகும் மன்னனை மட்டும் பாடாது அவன் படை வீரனது ஆற்றலையும் அறிந்து அவனையும் சிறப்பித்துள்ளனர்.

"இதற்கு ஈத்து ……..
…….. குறித்து வருவேலே"
என்ற பாடலில் வீரன் ஒருவனது குலப்பெருமைப் புலவரால் போற்றப்படுகிறது.

**தச்சுத் தொழில்**

பண்டைய தமிழர்கள் தச்சுத் தொழில் செய்து வாழ்ந்துள்ளமையைப் புறநானூறு பதிவு செய்துள்ளது. ஔவையார், அதியமானிடம் பரிசில் பெற வந்திருந்தார் . ஔவை இன்னு ம் சில நாட்கள் தம்முடன் தங்கவேண்டும் என எண்ணி மன்னன் பரிசிலை நீட்டித்தான் அதையறியாது சினம் கொண்ட ஔவை வாயில் காப்போனிடம்,

"காவி னெம் கலனே …….
……… அத்திசைச் சோறே"
என்ற பாடல் வரிகளின் மூலம் மக்கள் தச்சுத்தொழில் செய்து வந்துள்ளனர் என அறிய முடிகிறது.

"களம் புகழ் ஓம்புமின்
……… அன் னோனே!"

ஒரு நாளில் எட்டுத் தேர்களைச் செய்யும் திறமுள்ள தச்சன் , ஒரு மாதம் முழுதும் முயன்று செய்த ஒரு தேர்க்காலைப் போன்ற வலிமையுள்ள வீரர்களைக் கொண்டவன் அதியமான் என்பது இப்பாடலின் கருத்து . இது மன்னனின் வீரர்களின் வலிமையை உணர் த்துவதாக இருந்தாலும் தச்சுத்தொழில் செய்பவனது குறிப்பும் இப்பாடலில் இடம் பெறுகிறது.

**பெருஞ்சோறளித்தல்**

நம் நாட்டினர் , பகை நாட்டினர் என்று பிரித்துப் பார்க்காமல் அனைவருக்கும் பெருஞ்சோறு வழங்கும் குணம் படைத்தவர்களாக மன்னர்கள் இருந்துள்ளனர்.

"யானர் வைப்பின் …….
……… வரையாது கொடுத்தாய்"
இது மன்னனைப் புகழ்ந்து பாடப்படும் பாடலாக உள்ளது . இரு மன்னர் படைக்கும் பெருஞ்சோறு கொடுத்து ஓம்பும் போர் அறம் மிக்கவனாச் செயல்படுகிறான் மன்னன் , என்பதை இப்பாடல் உணர்த்துகின்றது.

**பிறரை வாழ வைக்கும் எண்ணம்**

சங்க கால மன்னர்கள் பிறருக்கு உதவ வந்துள்ளனர். இதனை,

"தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர்"


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

என்ற பாடலிலிருந்து வாழ்வது பிறரை வாழ்விப்பதற்காக என்பதையும் போர் அறத்துடன் தமிழன் வாழ்ந்துள்ளான் என்பதையும் அறிய முடிகின்றது.

**மன்னர்களின் குடும்ப நலம் காத்தல்**

எத்துணை ஆயினும் ஈத்தல் நன்றென (புறம் - 141) என்பதையே கோட்பாடாகக் கொண்டு அற்ப உயிரான மயில் அகவியதை கண்டு குளிரால் நடுங்கியதாக உணர்ந்து தன் போர்வையை அதற்குக் கொடுத்தவன் பேகன் . இத்தகைய கை வண்ணம் மிக்க வாழ்வு வாழ்ந்த பேகனிடம் ஒரு குறை வந்துள்ளது. அது அவனது இல் லத்திற்கு இழக்கு தரும் குறைவுடையதாய நின்றது . இதனைக் கண்ணுற்ற பரணர் பேகனை நாடிச்சென்று தன் மனத்துயரை எடுத்துரைத்தார்.

"கைவள் ஈகைச் .........
............. அழுதனள் பெரிதே"

மன்னா! உம் வாயில் சென்று உம்மையும் உம் மலையும் பாடியபோது உள்ளேயிருந்து யாரோ ஒரு பெண்ணொருத்தி அழுதாள். பேகனுடைய துணையான கண்ணகி தான் அழுதது என அறிந்தவர் . புலவர் அதை அறியாதவர் போல் யாராக இருந்தாலும் இறங்கத்தக்கவர் என்றார்.

**நன்னெறி**

நரிவெரூஉத்தரையார் என்ற புலவர் இவ்வுலகிற்கு நன்னெறிகளை உணர்த்தும் பொருட்டு மக்களை நோக்கி

"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்பு மின்'

என்று அறிவுரை பகிர்கின்றார் . நல்லது செய்தல் என்பது அனைவராலும் இயலாத ஒன்று . ஆனால் தீயன செய்யாதிருத்தல் எல்லோருக்கும் இயலும் இதுவே நல்ல ஒழுக்க தம்மை நல்ல வழிக்கு இட்டுச்செல்லும் என்று வலியுறுத்துகின்றார்.

**கல்வியின் மாண்பு**

கல்விச் செல்வமானது அழியாச் செல்வம் இத்தகு கல்வியை

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பற்றை நிலை முனியாது, கற்றல் நன்றே" (புறம், 183)

என்று கல்வி சிறப்பினையும், கற்கும் முறையினையும் காட்டுகின்றது.

**மக்கட்செல்வம்**

எத்தனை செல்வம் பெற்றிருந் தாலும் மழலைச் செல்வம் இல்லாவிடில் வாழ்க்கையில் எவ்விதப் பயனும் இல்லை என்பதை,

"குறுகுறு நடந்து சிறுகை .....
...... இல்லை தாம் வாழு நாளே" (புறம், 188)

என இப்பாடல் மக்கள் செல்வத்தின் மாட்சியைப் பாராட்டுகின்றது.

**சமுதாய பங்கேற்பு**

"அரிமயிர்த் திரள் ......
...... விறல் வஞ்சி"

என்ற பாடலானது ஆற்றில் புதுப்புனலாடல் , விளையாட்டயர்தல், அருவியாடல், கடலாடுதல் எனப் பல்வேறு விளையாட்டுக்களை பெண்கள் ஆடினர் என்பதை அறிய முடிகின்றது.


http://Creativecommons.org//license/by/4.0/.

**காதலை வெளிப்படுத்துதல்**

"அழபுனை தொடு கழல் மைஅணல் .....
..... இம்மையல் ஊரே"

பெருங்கோழி நாயக் கண் மகள் நக்கண்ணையார் பாடியது . பெண் மகள் தன் காதலை வெளிப்படுத்துவதாக அமைந்திருப்பதனால் பெண் கவிஞர்களின் உரிமைக்கும் துணிவிற்கும் எடுத்துக்காட்டான பாடலாகும்.

**விருந்தோம்பல்**

"விருந்து மிக வரினும் ........
........ மகடூஉப் போல"

இல்லத்திலிருந்து மிகக் குறைவான தெ ன்றாலும், வந்திருப்பவர்கள் மிகப் பலரானாலும் என்ன செய்வதென்று மனம் கலியாது படைத்தவர்கள் அக்கால இல்லத்தரசிகள்.

**வானக்கலை**

சங்க காலத் தமிழர் , ஐந்து பூதங்களைப் பற்றியும் , மழை உண்டாதல் பற்றியும் , ஆறு பருவங்கள் பற்றியும், அப்பருவங்களில் நிகழும் இயற்கை மாறுதல்க ள் பற்றியும் நாள்மீன்கள், கோள் மீன்கள் பற்றியும் அறிந்திருந்தனர்.

"ஆடு இயல் அழல் குட்டத்து .....
மணிவரை யன்னமா அயோனே"

**பொழுதுபோக்கு**

உழைப்போர்க்கு ஓய்வு இன்றியமையாதது . பொழுதுபோக்கால் உள்ளத்திற்கு இன்பம் , உடலுக்கும் புத்துணர்வு ஏற்பட்டு மீண்டும் மனம் கடமை யிலீடுபட புத்துணர்ச்சியும் புது புது மலர்ச்சியும் பெறுதல் வேண்டும்.

"...... பொதியில்
நரை மூதாளர் நாயிடக் குழிந்த"

சூதாட்டம், நெற்றி, நீராமல் நடனமாடல், மற்போர் முதலியனவாகும்.

**போர் விருப்பம்**

"ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவது அன்ற இவ்வுலகத் தியற்கை"

எல்லா உயிர்க்கும் இயல்பாக உள்ள பிறவிப் பண்புகளுள் போர் விருப்பம் ஒன்றாகும்.

**போர் ஏற்படக் காரணம்**

உரிமையைக் காக்கவும் மான இழிவைத் தடுக்கவும் பாதுகாப்புக்காகவும் போர் வேண்டப்படுகிறது. அக்காலத்தில் படைத்தலைவன் போன்ற அரசரும் போருக்குச் சென்றனர் . அவர்கள் பொறுப்புணர்ச்சியையும் வீரத்தையும் அது காட்டும்.

"காய்சினம் தவிராத கடல் ஊர்பு எழுநரும்" (புறம், 59)

**பழக்கவழக்கங்கள்**

புறநானூற்றுப் பாடல்களில் பண்டைத் தமிழரின் சில பழக்கவழக்கங்கள் காணப்படுகின்றன . அவை காலப் பண்பாட்டினை புலப்படுத்துகின்றன . அவற்றில் கலந்தொடா மகளிர் பற்றிய பழக்கத்தைக் காணலாம்.


http://Creativecommons.org//license/by/4.0/.

பெண்கள் பூப்புற்றிருக்கும் காலங்களில் தூய்மையற்றவர்களாகக் கருதப்படுவர் . அவர்கள் பூப்புற்றிருக்கும் காலங்களில் வீட்டுப் பண்டகளைத் தொடாமல் ஒதுங்கி வாழ்ந்தமையால் அவர்கள் கலந்தொடா மகளிர் எனப்பட்டனர் . புறநானூற்றுப் பாடலில் கலந்தொடா மகளிர் பற்றிய குறிப்பும் காணப்படுகிறது. சிற்றூர் மன்னனின் குதிரைத் தாக்குதலுக்குப் பகை மன்னனின் குதிரை பின்னிட்டதற்கு முருகன் கோயிலில் விலக்குடை மகளிர் பாண்டங்களைத் தொடப் பின் வாங்குதலை உவமையாகக் கூறுகின்றனர். இதனை,

“அணங்குடை முருகன் கோட்டத்துக்
கலந்தொட மகளிரின் இகழ்ந்து நின்றவ்வே”

என்ற அடிகள் மூலம் அறியலாம் . மகளிர் பூப்பெய்திய காலங்களில் ஒதுங்கி வாழ்தலை ஒரு பழக்கமாகக் கொண்டுள்ளனர் என்பதை இதன் மூலம் அறியலாம்.

**அரசுரிமை**

அரசுரிமை வழிவழியாக வந்தது. தந்தைக்குப் பின்னர் மகன் பட்டத்துக்கு வருவதே முறைமை என்பதை,

“மூத்தோர் மூத்தோர்க் கூற்ற முய்த்தெனப்
பாறர வந்த பழவிறற் றாயம்”

என்ற அடிகளால் உணர முடிகின்றது . அக்காலத்தில் வழிவழியாகப் பட்டத்துக்கு வருவதை ஒரு பண்பாடாகக் கருதியுள்ளனர்.

**அரசர்களும் அறமும்**

அரசர்கள் அறத்தின் ஆற்றலை நன்கு உணர்ந்திருந்தனர். இதனை

“அறநெறி முதற்றே அரசின் கொற்றம்”

என்ற வரிகளின் மூலம் அறியலாம் . பழங்காலத்தின் அரசர்கள் நீதிகளில் உள்ள கருத்துக்களின் படி நெறி பிறழாது வாழ்வைத் தம் பண்பாடாகக் கொண்டனர்.

**நீதி**

பழங்காலத்தில் அரசர்கள் சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் நடுநிலையுடன் நீதி வழங்கினர். இதனை

“நான்குடன் மாணட தாயினும் ……
…….. வாழிய நெடுந்தகை தாழ்நீர்”

என்ற புறநானூறு பாடலடிகள் விளக்குகின்றன.

**பழந்தமிழர் வாழ்க்கை முறை**

பழந்தமிழரின் வாழ்க்கை முறையினை நாம் பார்த்தால் மன்னராட்சியே எங்கும் நிலவியது . இருப்பினும் பொதுவுடைமைச் சமுதாயமாக விளங்கியமையைக் காணலாம் . உலகமெல்லாம் நல்வாழ்வு பெறவேண்டும் என்ற எண்ணம் கொண்டோராக அனைவரும் விளங்கினர் . ‘யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்’ என்று திருமூலர் கூறினார். இவை தவிர தாயமானவரும் “எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே ” என்று பாடுகின்றார் . கனியன் பூ ங்குன்றனார் “யாதும் ஊரே யாவரும் கேளிர் ” என்னும் பாடல் உயர்ந்த கருத்துக்களை கொண்டு விளங்குகின்றன . உலக வாழ்க்கையின் இயல்பினை இப்பாடல் மூலம் நாம் அறியமுடிகின்றது.

**நட்பின் தன்மை கூறல்**


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

நட்பு எத்தகைய தன்மையில் அமைதல் வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாய் அதியமான் ஔவை இருவரின் நட்பினைக் காட்டுகின்றார். நட்பு என்பது எவ்விதப் பயனையும் எதிர்ப்பார்க்காமல் அமைதல் நன்று . இவ்வாறு இருப்பின் அந்நட்பு ஒரு காலத்தில் மிகுவதும் பின் சுருங்குவதுமாக இருக்கும். இதனைத் தவிர்த்து நட்பு அன்பினையும் நல்குணத்தினையும் கொண்டு இருக்கவேண்டும் என்று குறிப்பிடுகின்றது. சான்றாக, ஔவையார் ஒரு சமயம் வழியில் சென்று கொண்டிருக்கையில் அதியன் ஒரு நாள் தனக்கு பரிசில் அளிக்கவில்லையே என்று எண்ணுகையில் அவர் மனதில் 'நாம் ஒரு நாள் அல்லது இரண்டு நாளாக சென்றாலும் , எப்போது சென்றாலும் அன்போடு வரவேற்பவன் அவன், பரிசில் காலதாமதமாக இருந்தால் என்ன அது நம் கையில் உள்ளது போலத்தான் என்று எண்ணுகிறார். நட்பில் நம்பிக்கை வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது . இதன் மூலம் நட்பின் சிறப்பும் அன்பின் திறமும் வெளிப்படுகின்றது. இதனை,

"அதியமான் பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினும் நீட்டாதாயினும் யானைதன்
..........................................
கையத்த துஅது பொய்க்காதே" (புறம், 101)

என்னும் பாடல் மூலம் அறிய முடிகின்றது . இன்றைய காலத்தோடு இதனை நோக்கின் உண்மையா நட்பினையும் உறவு முறையி ல் உறவினரோடு இருக்கும் நட்பினையும் ஔவையின் இப்பாடலை பயன்படுத்தினால் அவற்றின் உண்மைத்தன்மை வெளிப்படும்.

**செல்வத்தின் பயன்**

ஒரு மன்னன் கடல் சூழ்ந்த இவ்வுலகு முழுவதையும் தம் ஆளுகையில் கொண்டு ஆண்டு வந்தாலும் வீரனாக இருந்தாலும் இத்தகைய பெரிய அரசில் அவன் உண்பதும் உடுப்பதும் எவ்வளவு நாழி அளவு உணவும் உடையும் இரண்டே என்பதனை உணர வேண்டும் . இது இருபாலருக்கும் பொதுவான ஒன்றே ஆகும் . அதிகமான செல்வத்தை வைத்து இருப்பதும் ஆபத்தே என்ன செய்யலாம்? என்ற கேள்விக்கு பதில் இதோ பெற்றோரை ஆதரவை இழந்த குழந்தைகள் , முதிர்ந்த வயதினை உடையவர், நோயாளிகள், உடல் உறுப்பு குறைந்தவர் ஆகியோருக்கு உதவுதல் , இன்று கட்டாயமாக கொள்ளப்படுகின்றது. ஏனெனில் 'செல்வத்தின் பயனை ஈதல் வறியார்க்கு ஈதலே ஈகை ' என்று குறிப்பிடுகின்றது. இதனை,

"உண்பது நாழி உடுப்பவை இரண்டே;
பிறவுமெல்லாம் ஓரொக்கும்மே;
செல்வத்து பயனை ஈதல்
துய்ப்போம் எனினே தப்புந பலவே" (புறம், 189)

என்னும் பாடல் மூலம் வீணாக பணத்தினை செலவு செய்யாமல் நம்மால் முடிந்த உதவிகளை பிறருக்கு செய்யவேண்டும் என்ற கருத்தினை விளக்குகின்றது.

**உலகின் இயல்பு கூறல்**

கணியன் பூங்குன்றனாரின் பாட்டிலும் பல்குடுக் கை நன்கணியாரின் பாட்டிலும் உலகின் இயல்பான தன்மை பற்றி குறிப்பிடுகின்றனர் . இவ்வுலகில் இன்பமும் உண்டு துன்பமும் உண்டு என்பதனை உணரவேண்டும் . நன்மையும் தீமையும் பிறரால் உண்டாவன அல்ல என்பதனையும் இறப்பினைக் கண்டு அஞ்சவேண்டும் என்பதும் பொதுவான ஒன்றேயாம் . வாழ்வில் சேர்தலும் பிரிதலும் உண்டு என்ற இன்னும் பல தன்மைகளைக் கொண்டு உலக வாழ்வு அமைகின்றது .


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

இவற்றினை உணர்ந்தால் வாழ்க்கை சுமையாக இருக்காது . சுகமாக மாறிவிடும் என்பதை குறிப்பிடுகின்றது. இதனை,

"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தரவ வாரா" (புறம், 192)

என்னும் பாடலும்

"இன்னாது அம்ம இவ்வுலகம்
இனிய காண்கிதன் இயல்புணர்ந் தோரே" (புறம், 194)

என்னும் பாடலினையும் சான்றாக கொள்ளப்படுகின்றது. இவை தவிர 'காலம் கண் போன்றது கடமை பொன் போன்றது' என்பதன் வாய்மொழிக்கு ஏற்ப காலத்தினை வீணாக்கக்கூடாது . ஒரு செயலை காலம் கடந்து செய்வதால் அது சிறப்பினைத் தராது . சரியான நேரத்தில் முடித்தால் நன்று என்றும் குறிப்பிடுகின்றது.

**முடிவுரை**

புறநானூற்றில் பன்நோக்குப் பார்வை என்னும் தலைப்பின்கீழ் கொடை ஒழுக்கமான வாழ்வு , பழக்கவழக்கம், பண்பாடு, நீதி, அரசியல், போர்விருப்பம் போருக்கான காரணங்கள், தச்சுத்தொழில் வீரர்களை போற்றுதல் , நன்னெறி, மக்கட்செல்வம், கல்வி, வானக்கலை, விருந்தோம்பல், காதல். அறச்செயல்கள் போன்றவை குறித்து சான்றுகள் வாயிலாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது . பண்டைத் தமிழர்களைப் பற்றி அறிந்துகொள்ள புறநானூறு ஒரு சிறந்த ஆவணமாகத் திகழ் கிறது எனலாம் . புறநானூறு வாழ்க்கையில் நாம் என்னென்ன கடைபிடிக்க வேண்டும் என்பதனை குறிப்பிடுகின்றது . வாழ்க்கைக்குரிய மறத்தோடு இணைந்து கூறுகின்ற தன்மையை அறியமுடிகின்றது . மன்னன் தன்வாழ்வில் என்னென்ன அறத்தினை செய்யவேண்டும் என்றும் மக்களின் வாழ்க்கை முறையில் எவைஎவை இடம்பெறுகின்றன என்பதையும் எடுத்துக்கூறுகின்றது. இவ்வாறு புறநானூற்றுப் பாடலின் கருத்துக்களை காண்கையில் இக்கால வாழ்க்கை முறைக்கும் தேவையானவற்றை குறிப்பிடுகின்றமையை நம்மால் உணர முடிகின்றது.

**துணைநின்றவை**

1. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.
2. தேவநேயப்பாவணர், ஞா., பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும்
3. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானுடவியல்.
4. பரமு சிவானந்தம், அ.மு., சமூகமும் பண்பாடும்.
5. புலியூர்கேசிகன், (உ.ஆ.), புறநானூறு, பாரிநிலையம், சென்னை.


http://Creativecommons.org//license/by/4.0/.